அக்டோபர்: 26

## ஓசியா

### வாசிக்க: ஓசியா 1:2

வேதப்புத்தகத்தில் பழைய ஏற்பாட்டில் 16 தீர்க்கதரிசனப் புத்தகமும் புதிய ஏற்பாட்டுப்புத்தகத்தில் 1 தீர்க்கதரிசனப்புத்தகமும் உள்ளது. பழைய ஏற்பாட்டுப்புத்தகத்தின் 16 புத்தகங்களில் நான்கு பெரிய தீர்க்கதரிசனப் புத்தகமும் பன்னிரண்டு சிறிய தீர்க்கதரிசனப் புத்தகமமுண்டு. சிறிய தீர்க்கதரிசனம் என்றால் தீர்க்கதரிசனத்தில், கருத்தில், சத்தியத்தில் ஆழம் குறைவு என்று அர்த்தமில்லை. எழுதப்பட்ட அளவுதான் குறைவு. ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் பெரிய தீர்க்கதரிசன புத்தகமாகும். ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகியன சிறிய தீர்கதரிசனப் புத்தகமாகும். இன்றிலிருந்து ஓசியா புத்தகத்தை கற்கப்போகிறோம். கர்த்தர் உதவி செய்வாராக. பிள்ளைகளே நீங்கள் எதைச் செய்தாலும் முதல் ஜெபித்துவிட்டு செய்யும் பழக்கமுடையவர்களாக இருக்க வேண்டும். வேதத்தை வாசிக்க முன்கூட ஜெபித்துவிட்டு வாசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தேவ ஆவியானவரின் உதவியோடு இன்னும் கூடுதலாக புரிந்துகொள்ளுவீர்கள். ஓசியா கி.மு 760 லிருந்து 700 வரையான காலத்தில் தீர்க்கதரிசனம் சொன்னவர்.

### கேள்வி:

ஓசியா புத்தகத்தின் நோக்கம் என்ன?

### பதில்:

கர்த்தரின் அளவற்ற அன்பை வெளிப்படுத்தி நிற்கிறது. தேவனை விட்டு பின்மாற்றமாய் போன மக்களை மீண்டும் மீண்டும் தன்னிடம் வரும்படி வாஞ்சை கொண்டு நிற்கிறார். பாவிகளை நேசிப்பதும், மனந்திரும்ப வாய்ப்பளிப்பதுமே இதன் நோக்கம். இதை எழுதிய ஓசியா வாழ்ந்த நாட்களில். யோவேல், எசாயா, மீகா, நாகூம் போன்ற தீர்க்கதரிசிகள் வெவ்வேறு இடங்களில் இருந்து தீர்க்கதரிசனம் சொன்னார்கள். ஓசியா வட நாடான இஸ்ரவேல், சமாரியா, எப்பிராயீம் போன்ற இடங்களில் வாழ்ந்து ஊழியம் செய்து வந்தார். கர்த்தர் ஓசியாவைக்கொண்டு உரைக்கத்தொடங்கினபோது, கர்த்தர் ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு சோர ஸ்த்திரியையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாக சேர்த்துக்கொள்; தேசம் கர்த்தரை விட்டு விலகிச் சோரம்போயிற்று என்றார். ஓசியா1:2. பிள்ளைகளே ஓசியாவை பார்த்து கர்த்தர் சொல்லுகிறார். விபசாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு பெண்ணையும் அவள் பிள்ளைகளையும் உன்னோடு சேர்த்துக்கொள். திருமணம் செய்துகொள் என்று கூறுகிறார். சாதாரண மனிதர்களால் கூடாத காரியம். நாமென்றால் இது அநியாயம் கர்த்தர் இப்படி சொல்லமாட்டார் எனக் கூறி நழுவிவிடுவோம். ஆனால் ஓசியா கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்படிந்தான். எஜமானின் வார்த்தைக்கு வேலைக்காரன் கீழ்படிவது போல். எங்கள் வாழ்விலும் கர்த்தர் எஜமானாய் இருக்க வேண்டும். கடினமான பணி தந்தாலும் நாம் மனமுவந்து செய்ய வேண்டும். அதற்கான பிரதிபலனை கர்த்தர் நிச்சயம் தருவார். 66 வேத புத்தகத்தில் ஓசியா ஒரு புத்தகமாக இடம் பிடித்ததற்கு காரணாம் அவரின் கீழ்படிவும் தியாகமான வாழ்வுமே ஆகும்.

அது நன்மையானாலும் தீமையானாலும் சரி, எங்கள் தேவனாகிய **கர்த்தரின்** சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதினால் எங்களுக்கு நன்மையுண்டாகும்படி நாங்கள் உம்மை அனுப்புகிற எங்கள் தேவனாகிய **கர்த்தருடைய** சத்தத்துக்குக் கீழ்படிந்து நடப்போம் என்றார்கள். **எரேமியா 42:6**

ஜெபம்

அன்பும் கிருபையும் நிறைந்த தகப்பனே. இயேசப்பாவின் சத்தத்திற்கு செவிகொடுத்து, அவரின் சித்தம் செய்கிற பிள்ளைகளாய் வாழுவோம். ஆமென்